# ‘மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்க வேண்டும்’

பெங்களூரு, அக். 10: மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்க அனைவரும் முன்வர வேண்டும் என்று மந்திரிஸ்கோயர் தலைவர் நிதின் பிர் தெரிவித்தார்.

தீபாவளியையொட்டி, சமர்த்தனம் அறக்கட்டளையினரும், மந்திரிஸ்கோயர் குழுமத்தினரும் இணைந்து பெங்களூரு மல்லேஸ்வரத்தில் காதுகேளாதவர்களுக்காக இசை, நடனப் போட்டியை அண்மையில் நடைபெற்றது.

இதில் நிதின்பிர் பேசியது:-

அனைவருக்கும் அன்பையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வதே தீபாவளி பண்டிகையாகும். இந்தப் பண்டிகையில் தனித்திறமை கொண்ட மாற்றுத்திரனாளிகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தப் போட்டி நடத்தப்பட்டுள்ளது.

இதில், காது கேளாத மாணவர்கள் 25-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த போட்டியில் யார் வெற்றி பெற்றாலும் அனைவருக்கும் பரிசு வழங்கி கௌரவிக்க முடிவு செய்துள்ளோம். மாற்றுத்திறனாளிகளின் திறனை கண்டறிந்து ஊக்குவிப்பதன் மூலம், அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்றார் அவர்.



பெங்களூரு மல்லேஸ்வரத்தில் நடைபெற்ற காது கேளாதவர்களுக்கான இசை, நடனப் போட்டியில் பங்கேற்ற மாற்றுத்திறனாளி மாணவர்கள்.